பரமக்குடி நகராட்சி அலுவலகம்,
நாள்.**29.08.2019**

**<u>நிகழும் திருவள்ளுவராண்டு ஆகஸ்ட் மாதம் 30 ம் நாள் (30.08.2019) காலை 11.00 மணியளவில் நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற சாதாரண கூட்டப் பொருள்கள்</u>**

| | |
|---|---|
| பொருள்.1 | பரமக்குடி நகராட்சி ஆணையாளர் அவர்களின் ஆகஸ்ட் 2019ம் மாதத்தின் நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு<br><br>அலுவலகக்குறிப்பு –<br>மன்றம் பதிவு செய்யலாம். |
| பொருள்.2 | பரமக்குடி நகராட்சி பொறியாளர் அவர்களின் ஆகஸ்ட் 2019ம் மாதத்தின் நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு<br><br>அலுவலகக்குறிப்பு –<br>மன்றம் பதிவு செய்யலாம். |
| பொருள்.3 | பரமக்குடி நகராட்சி நகரமைப்பு அலுவலர் அவர்களின் ஆகஸ்ட் 2019 மாதத்தின் நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு<br><br>அலுவலகக்குறிப்பு –<br>மன்றம் பதிவு செய்யலாம். |
| பொருள்.4 | பரமக்குடி நகராட்சி சுகாதார அலுவலர் அவர்களின் ஆகஸ்ட் 2019 மாதத்தின் நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு<br><br>அலுவலகக்குறிப்பு –<br>மன்றம் பதிவு செய்யலாம். |
| பொருள்.5 | நகர் மன்ற தீர்மான எண் நாள். 28.06.2019ன்படி இந்நகராட்சியில் பொது சுகாதார வாகனம் TN 65- C-8406 டிராக்டர் டிரைலருக்கு 2019 –2020 வருடாந்திர தகுதிசான்று பெறுவதற்கான பழுதுப்பணிகள் மேற்கொள்ள சம்மந்தப்பட்ட நிறுவனங்களிடமிருந்து 16.7.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்ட இரண்டு நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்கப்புள்ளிகள் வரப்பட்டன. |

| வ. எண் | பழுதுப்பணிகள் விபரம் | பாபு ஆட்டோ மொபைல்ஸ் இன்ஜினியரிங் ஒர்க்ஸ் ,பரமக்குடி என்ற நிறுவனத்தின்ஒப்பந்தபுள்ளி | தீபா எண்டர்பிரைசஸ், பரமக்குடி என்ற நிறுவனத்தின் ஒப்பந்தபுள்ளி |
|---|---|---|---|
| 1 | பொது சுகாதார வாகனம் TN65 C–8406 டிராக்டர் டிரைலருக்கு பழுதுப்பணிகள் மேற்கொள்ளுதல் | ரூ . 84450/– | ரூ. 89900/– |

வரப்பட்ட இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் குறைந்த தொகைக்கு பழுதுப்பணிகள்மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி வழங்கிய பாபு ஆட்டோ மொபைல்ஸ் இன்ஜினியரிங் ஒர்க்ஸ் பரமக்குடி என்ற நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கிட நகர் மன்றத்தின் அனுமதிக்கு.

| | |
|---|---|
| | <u>அலுவலகக் குறிப்பு–</u><br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2.குறைந்த தொகைக்கு ஒப்பந்தபுள்ளி வழங்கிய பாபு ஆட்டோ மொபைல்ஸ் இன்ஜினியரிங் ஒர்க்ஸ் பரமக்குடி என்ற நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.<br>3.செலவினத்தை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். |
| பொருள்.6 | இந்நகராட்சியில் 8th SHPC யின் கீழ் தூய்மை இந்தியா திட்டம் – திடக்கழிவு மேலாண்மை தலைப்பின் கீழ் 5 எண்ணம் இலகுரக வாகனங்கள் ரூ.28.00 லட்சம் மதிப்பீட்டில் வாங்குவதற்கு ஒப்பந்தப்புள்ளி கோரியதில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி ரேட் கொடுத்துள்ள லெட்சுமி ஆட்டோ டீசல் ஒர்க்ஸ், மேட்டூர் நிறுவனத்தினருக்கு வேலை உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. அதன்படி மேற்படி நிறுவனத்தினர் 5 எண்ணம் இலகுரக வாகனங்கள் சப்ளை செய்தமைக்கான செலவினம் ரூ.2724825/– ஆகும். எனவே ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை ரூ.28.00 லட்சத்தில் செலவினம் போக மீதமுள்ள தொகை ரூ.75175/–ற்கு மேற்படி திட்டத்தின் கீழ் சப்ளை செய்துள்ள இலகுரக வாகனங்களுக்குத் தேவையான 250 லிட்டர் கொள்ளளவுள்ள பிவிசி பேரல்கள் ( மக்கும் குப்பை மட்காத குப்பை என பிரித்து நகர் பகுதிகளில் உள்ள தெருக்களில் பொதுமக்களிடமிருந்து பெறுவதற்கு ) வாங்குவதற்கு அதற்கான செலவினத்தை மேற்கண்ட தொகையிலிருந்து ஈடு செய்து கொள்ளவும் அனுமதி வேண்டப்படுகிறது.<br>மேலும், தற்பொழுது நகர் பகுதியில் நுண்ம உர மையங்கள் அமைத்துள்ளதால் அவற்றை செயல்பாட்டிற்கு கொண்டு வரும் பொருட்டும் அவசர அவசியம் கருதி மேற்படி 250 லிட்டர் கொள்ளளவுள்ள பிவிசி பேரல்கள் 52 எண்ணம் வாங்குவதற்கு உரிய நிறுவனங்களில் விலைப்புள்ளி பெற்று பணி மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலலக் குறிப்பு–<br>1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) மேற்படி பணிக்கான செலவினத்தை இலகுரக வாகனங்கள் வாங்குவதற்கு ஒதுக்கீடு செய்துள்ள தொகையிலிருந்து ஈடு செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம். |
| பொருள்.7 | இந்நகராட்சி பராமரிப்பில் உள்ள சுதந்திர தின பூங்கா மற்றும் சிறுவர் பூங்காவில் உள்ள விளையாட்டு உபகரணங்கள் பழுதடைந்து செயல்படாமல் உள்ளது. மேலும், கழிப்பறை கட்டிடம் பழுதடைந்து உள்ளது. இதனால் பொதுமக்களுக்கு மிகவும் இடையூராக உள்ளது. எனவே பொதுமக்கள் நலன் கருதி மேற்படி பூங்காவில் மராமத்துப்பணி மேற்கொள்ளவும், கழிப்பறை வசதி செய்யவும் தயார் செய்யப்பட்டுள்ள உத்தேச மதிப்பீடு ரூ.1.80 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு–<br>மன்றம் அனுமதிக்கலாம். மேலும் மேற்கண்ட பணிக்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியில் இருந்து செலவு செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம். |
| பொருள்.8 | இந்நகராட்சி பராமரிப்பில் உள்ள நகராட்சி உரக்கிடங்கில் தினசரி சேகரிக்கப்பட்டு வரும் வீட்டு அபயாகர கழிவுகள் மற்றும் மட்காத குப்பைகள் ஆகியவற்றை தனித்தனியாக சேகரிப்பு செய்யும் பொருட்டு வளம் மீட்பு மையம் அமைக்கவும் அதற்கான உத்தேச மதிப்பீடு ரூ.100000/–க்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு–<br>1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) மேற்கண்ட செலவினத்தை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ளலாம். |
| பொருள்.9 | இந்நகராட்சி பராமரிப்பில் உள்ள தெருவிளக்குகளுக்குரிய மின் இணைப்பு இரும்பு பெட்டிகள் 150 எண்ணம் அமைக்கப்பட்டுள்ளது. மேற்படி மின் இணைப்புகளுக்குரிய இரும்பு பெட்டிகள் சேதமடைந்து உள்ளதால் மழைக்காலங்களில் உட்புற சுவிட்சுகள் பழுதடைந்தும் மின் அளவுக் கருவிகள் எரிந்து மின்சாரம் வெளிப்படும் அபாயம் உள்ளதாலும், பொதுமக்களுக்கு ஆபத்து ஏற்படும் சூழ்நிலையும் உள்ளது. எனவே முதல் கட்டமாக சுமார் 50 எண்ண்ம் சுவிட்ச் பாக்ஸ் இரும்பு பெட்டிகளை |

| | |
|---|---|
| | மாற்றியமைக்க ரூ.5.00 லட்சத்திற்கு தயாரிக்கப்பட்டுள்ள உத்தேச மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு–<br>மன்றம் அனுமதிக்கலாம், மேலும் இப்பணிக்கான செலவினத்தை நகராட்சி பொதுநிதியில் இருந்து செலவு செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம். |
| பொருள்.10 | இந்நகராட்சி களப்பணி உதவியாளர் மற்றும் சுகாதார ஆய்வாளரின் அறிக்கையில் இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் 36 வார்டு பகுதிகளிலும் வெளிப்புறங்களில் கொசு மருந்து அடிக்க பயன்படும் Vehicle Mounted Fogging Machine கொள்முதல் செய்யப்பட்டு 8 வருடங்களுக்கு மேல் ஆகிவிட்டபடியால் 24.07.2019ம் தேதிய நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் வழிகாட்டு நெறிமுறைகளின்படி ஒரு லட்சம் மக்கள் தொகைக்கு 1 வாகனத்தில் பொறுத்தப்பட புகை மருந்து அழிப்பான் வாங்கிக் கொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளதாலும், மேற்கண்ட இயந்திரம் முற்றிலும் பழுதடைந்து பயன்பாட்டில் இல்லாத நிலையில் உள்ளதாகவும், அதன்பொருட்டு புதிதாக ஒரு Vehicle Mounted Fogging Machine வாங்கி வழங்குமாறு தெரிவித்துள்ளார்கள்.<br>தற்பொழுது மழைக்காலம் துவங்கி விட்டபடியால் டெங்கு போன்ற தொற்று நோய்களை கட்டுப்படுத்தும் பொருட்டு பொது சுகாதார அவசர அவசியம் கருதியும், நோய் தடுப்பின் முக்கியத்துவம் கருதியும் புதிதாக Vehicle Mounted Fogging Machine ரூ.5.00 லட்சம் உத்தேச செலவினத்திற்குள் சம்மந்தப்பட்ட நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளி கோரி கொள்முதல் செய்ய நகர்மன்றத்தின் அனுமதிக்கு.<br><br>அலுவலகக்குறிப்பு –<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. ரூ.5.00 லட்சம் உத்தேச செலவினத்திற்குள் சம்மந்தப்பட்ட நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளி கோரி கொள்முதல் செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.<br>3. செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.2755/2019/எச்2 |
| பொருள்.11 | இந்நகராட்சி களப்பணி உதவியாளர் மற்றும் சுகாதார ஆய்வாளரின் அறிக்கையில் இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் கொசு ஒழிப்புப்பணியில் வீட்டின் உட்புறம் புகை மருந்து அடிக்க பயன்படுத்தப்படும் Mini Hand Fog இயந்திரங்கள் அனைத்தும் முற்றிலும் பழுதடைந்து இயக்க முடியாத நிலையில் உள்ளதாகவும், மேற்கண்ட இயந்திரங்கள் கொள்முதல் செய்யப்பட்டு 2 வருடங்களுக்கு மேல் ஆகிவிட்டபடியாலும், புதிதாக 10 Mini Hand Fog இயந்திரங்கள் வாங்கி வழங்குமாறு தெரிவித்துள்ளார்கள்.<br>தற்பொழுது மழைக்காலம் துவங்கி விட்டபடியாலும், டெங்கு போன்ற தொற்று நோய்களை கட்டுப்படுத்தும் பொருட்டு, பொது சுகாதார அவசர அவசியம் கருதியும், நோய் தடுப்பின் முக்கியத்துவம் கருதியும் ரூ.3.00 லட்சம் உத்தேச செலவினத்திற்குள் Mini Hand Fog இயந்திரங்கள் 10 எண்ணிக்கையிலும், அதற்கு எரிபொருளாக பயன்படக்கூடிய ஏரோசால் சிலிண்டர்களையும் சம்மந்தப்பட்ட நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளி கோரி கொள்முதல் செய்ய நகர்மன்றத்தின் அனுமதிக்கு.<br>அலுவலகக்குறிப்பு<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. ரூ.ரூ.3.00 லட்சம் உத்தேச செலவினத்திற்குள் Mini Hand Fog இயந்திரங்கள் 10 எண்ணிக்கையிலும், அதற்கு எரிபொருளாக பயன்படக்கூடிய ஏரோசால் சிலிண்டர்களையும் சம்மந்தப்பட்ட நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளி கோரி கொள்முதல் செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.<br>3. செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.2754/2019/எச்2 |

| | |
|---|---|
| பொருள்.12 | இந்நகராட்சி சுகாதார ஆய்வாளர்களின் அறிக்கையின்படி பொது சுகாதார பணியாளர்கள், பொதுப்பிரிவு, பொறியியல் பிரிவு பணியாளர்கள், துப்புரவுப்பணி மேற்பார்வையாளர்கள், ஓட்டுநர்கள் மற்றும் துலக்குநர்களுக்கு 2019–2020ம் ஆண்டிற்கான சீருடைகள் மற்றும் காலனிகள் வழங்க வேண்டியுள்ளது.<br><br>1) பொது சுகாதாரப் பிரிவு<br>1) ஆண் துப்புரவு பணியாளர்கள் – 49<br>2) பெண் துப்புரவு பணியாளர்கள் – 23<br>3) துப்புரவு பணி மேற்பார்வையாளர்கள் – 08<br>4) பொது சுகாதார துலக்குனர்கள் – 01<br>5) பொது சுகாதார ஓட்டுனர்கள் – 06<br>6) மருத்துவ ஆயா – 03<br>7) களப்பணி உதவியாளர் – 01<br>2) பொதுப்பிரிவு<br>1) அலுவலக உதவியாளர் – 06<br>2) காவலர்கள் – 01<br>3) பொறியியல் பிரிவு<br>1) குடிநீர் பணியாளர்கள் – 11<br>2) குடிநீர் பிரிவு ஓட்டுனர்கள் – 03<br>3) மின்பிரிவு பணியாளர்கள் – 05<br>4) அலுவலக உதவியாளர் – 01<br><br>மேற்கண்ட பணியாளர்களில் ஆண் துப்புரவு பணியாளர்கள் நபர்களுக்கு இரண்டு ஜோடி காக்கி பாலிஸ்டர் பேண்ட் சட்டைகள், பெண் துப்புரவு பணியாளர்கள் மற்றும் மருத்துவ ஆயாக்களுக்கு இரண்டு ஜோடி சேலைகள் மற்றும் ஜாக்கெட்கள், பொதுப்பிரிவு அலுவலக உதவியாளர்களுக்கு இரண்டு ஜோடி வெள்ளை பாலிஸ்டடர் பேண்ட் சட்டைகள், குடிநீர் மற்றும் மின்பிரிவு பணியாளர்களுக்கு இரண்டு ஜோடி காக்கி பாலிஸ்டர் பேண்ட் சட்டைகள், துப்புரவு பணி மேற்பார்வையாளர்களுக்கு இரண்டு ஜோடி வெள்ளை நிற சட்டையும், இரண்டு ஜோடி காக்கி பேண்ட்டும் மற்றும் அவைகளுக்குண்டான தையல் கூலி மற்றும் துப்புரவு பணியாளர்கள் மற்றும் துப்புரவு பணி மேற்பார்வையாளர்களுக்கு காலணிகளும், ஓட்டுநர்களுக்கு தோல் ஷீக்களும் ரூ.3,00,000க்குள் வாங்கி வழங்குவதற்கும், சீருடைகளை நகராட்சி நிர்வாக ஆணையரின் உத்தரவின்படி தமிழ்நாடு டெக்ஸ்டைல் கார்ப்ரேசன் லிமிடெட், கோயம்முத்தூர் என்ற அரசு நிறுவனத்திடமிருந்து நேரடியாக கொள்முதல் செய்வதற்கும், காலணிகள் மற்றும் தோல் ஷீக்களை உள்ளூர் நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளி பெற்று கொள்முதல் செய்வதற்கும் நகர்மன்றத்தின் அனுமதிக்கு.<br><br>அலுவலகக்குறிப்பு –<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. ரூ.3,00,000 உத்தேச செலவினத்திற்குள் சீருடைகளை தமிழ்நாடு டெக்ஸ்டைல் கார்ப்ரேசன் லிமிடெட், கோயம்முத்தூர் என்ற அரசு நிறுவனத்திடமிருந்தும், காலணிகள் மற்றும் தோல் ஷீக்களை உள்ளூர் நிறுவனங்களிடமிருந்தும் விலைப்புள்ளி பெற்று கொள்முதல் செய்தவதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.<br>3. செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.2790/2019/எச்2 |

| | |
|---|---|
| பொருள்.13 | 209, பரமக்குடி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட நகராட்சி வார்டு பகுதிகளுக்கான வருகின்ற உள்ளாட்சி தேர்தலினை எதிர்நோக்கி வாக்காளர் பட்டியல்களை செம்மைப்படுத்துதல் தொடர்பான வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்கத் திருத்தம், வாக்காளர் பட்டியல் சரிபார்ப்பு பணிகள், பொதுமக்கள் அறியும் வண்ணம் விளம்பரப்படுத்துதல் மற்றும் இதர தேர்தல் பணிகள் தொடர்ந்து மேற்கொள்ள இருப்பதால், உள்ளாட்சி தேர்தல் அவசர அவசியம் கருதி மேற்படி தேர்தல் பணிகளுக்கான அனைத்து செலவினங்களுக்கு உத்தேச தொகை ரூ.1000000/– (ரூபாய் பத்து லட்சம்) பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு–<br>மன்றம் அனுமதிக்கலாம்<br>(ந.க.எண்.1968/16/சி3) |
| பொருள்.14 | இந்நகராட்சியில் 21.05.2002 முதல் 10.09.2002 வரையிலும் மற்றும் 18.11.2002 முதல் 13.12.2002 வரையிலும் ஆணையாளராகப் பணிபுரிந்து ஓய்வு பெற்ற திரு.ஜி.வெங்கடேசன் என்பவரால் சென்னை உயர்நீதிமன்றத்தில் தணிக்கைத் தடை பத்திகளின் நிலுவை தொடர்பாக, இந்நகராட்சிக்கு எதிராக தொடரப்பட்ட வழக்கு டபிள்யூ.பி.எண்.15973/2019 க்கு, இந்நகராட்சியின் சார்பில் ஆஜராகியுள்ள திரு.எம்.புருஷோத்தமன்உயர்நீதிமன்ற வழக்கறிஞர் மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் சார்பாக ஆஜராகியுள்ள சிறப்பு அரசு வழக்குரைஞர் திரு.ஜே.போத்திராஜா என்பவருக்கும் வழக்குக் கட்டணம் வழங்குதற்கு உத்தேச செலவினமாக ரூ.30,000/–ற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு–<br>மன்றம் அனுமதிக்கலாம். |
| பொருள்.15 | பரமக்குடி நகராட்சி பகுதியில் அமைந்துள்ள அனைத்து விதமான கட்டிடங்களிலும் மழைநீர் சேகரிப்பு அமைப்பு ஏற்படுத்த வேண்டியது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. தற்போது தமிழ்நாடு ஒருங்கிணைந்த கட்டிட விதிகளின்படி புதிதாக நகராட்சி பகுதியில் கட்டப்பட்டு வரும் அனைத்து கட்டிடங்களுக்கு மழைநீர் சேகரிப்பு அமைப்பு ஏற்படுத்த வைப்பு தொகை ரூ.5000/– செலுத்த வேண்டும். கட்டிடப் பணி முடிவடைந்த பின்னர் தங்கள் கட்டிடங்களில் மழைநீர் சேகரிப்பு அமைப்பு உள்ளதற்கான புகைபடத்துடன் விண்ணப்பம் பெறப்படும் பட்சத்தில் மேற்படி தொகையினை திருப்பி வழங்கவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு–<br>மன்றம் அனுமதிக்கலாம். |
| பொருள்.16 | பரமக்குடி நகராட்சிக்குட்பட்ட வார்டு –B, பிளாக்–3, நகரபுல எண்.11/4A, பழைய சர்வே எண் 126/5 PT, 126/6PT, மொத்த பரப்பளவு 4046.82 ச.மீ. அமைந்துள்ள இடத்திற்கு அனுமதியற்ற மனை பிரிவில் அரசாணை எண் 78, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை நாள் 04.05.2017 மற்றும் அரசாணை எண். 172 வீட்டுவசதி மற்றம் நகர்புற வளர்ச்சி துறை நாள். 13.12.2017 ஆகியவற்றின்படி கொள்கை அளவிலான ஒப்புதல் நகர் ஊரமைப்புதுறை இயக்குநர் சிவகங்கை அவர்களால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் சிவகங்கை அவர்களின் செயல்முறைகள் ஆணை எண்.8360/2018/சிம2 நாள். 03.05.2017 மனைபடி வரைபடத்தின்படி பத்திர எண். 3394 நாள். 19.08.19 ன்படி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள சாலை மற்றும் பூங்காவும் இனம் சாசனம் மூலம் ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு–<br>1.மன்றம் அனுமதிக்கலாம். |

| | |
|---|---|
| | 2.அனுமதியற்ற மனை பணிகளை வரன்முறைபடுத்தும் அரசாணைபடி நகர் ஊரமைப்பு துணை இயக்கநர் சிவகங்கை அவர்களின் வழங்கியுள்ள கொள்கை அளவிலான ஒப்புதலின் படி உள்ளாட்சிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட சாலைகள் மற்றும் பூங்காகளையும் வரைபடத்தில் குறிப்பிட்டுள்ளபடி தானம் பத்திரம் மூலம் ஒப்படைப்பு செய்துள்ளதை மன்றம் ஏற்கலாம். |
| பொருள்.17 | பரமக்குடி நகராட்சிக்குட்பட்ட வார்டு – B, பிளாக் –3, நகரளவை எண். 11/9 A, மொத்தம் பரப்பளவு 4451. 50 ச.மீ. உள்ள இடத்தில் அமைந்துள்ள அனுமதியற்ற மனைபிரிவில் அரசாணை எண். 78, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை நாள். 04.05.2017 மற்றும் அரசாணை எண் 172 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை நாள். 13.12.2017 ஆகியவற்றின் படி கொள்கை அளவிலான ஒப்புதல் நகர் ஊரமைப்புத்துறை இயக்குநர் சிவகங்கை அவர்களால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது, மேற்படி நகர் ஊரமைப்பு துறை இயக்குநர் சிவகங்கை அவர்களின் செயல்முறைகள் ஆணை எண். 8359/2018/சிம2 நாள். 20.05.2019 மனைப்பிரிவு வரைபடத்தின் படி பத்திர எண். 3395 நாள். 19/08/2019ன் படி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள சாலை மற்றும் பூங்காகளையும் இனம் சாசனம் மூலம் ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ள மன்றத்தின் அனுமதி வேண்டபடுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு–<br>1.மன்றம் அனுமதிக்கலாம்.<br>2.அனுமதியற்ற மனை பணிகளை வரன்முறைபடுத்தும் அரசாணைபடி நகர் ஊரமைப்பு துணை இயக்கநர் சிவகங்கை அவர்களின் வழங்கியுள்ள கொள்கை அளவிலான ஒப்புதலின் படி உள்ளாட்சிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட சாலைகள் மற்றும் பூங்காகளையும் வரைபடத்தில் குறிப்பிட்டுள்ளபடி தானம் பத்திரம் மூலம் ஒப்படைப்பு செய்துள்ளதை மன்றம் ஏற்கலாம். |
| பொருள். 18 | அரசு ஆணை எண். 240, நாள். 02.08.2019ன் படி அரசுப் பணியாளர்களுக்கு பண்டிகைகால முன்பணம் ரூ. 5000/– யிலிருந்து 10,000/– ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. அரசு ஆணையில் தெரிவித்துள்ளபடி இந்நகராட்சி அலுவலர் மற்றும் பணியாளர்களுக்க ரூ.10,000/– தீபாவளி பண்டிகை முன்பணம் வழங்க மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும்.<br><br>அலுவலகக் குறிப்பு–<br>1.மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண். 2974/2019/பி2 |
| பொருள்.19 | இந்நகராட்சி பராமரிப்பில் உள்ள நகராட்சி கட்டிடங்கள், பள்ளி கட்டிடங்கள் மற்றும் சிறுமின்விசை பம்புகள் போன்றவற்றில் மழைநீர் சேகரிப்பு அமைப்புகள் அமைக்க உத்தேச மதிப்பீடு ரூ. 3.00 (மூன்று) லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு–<br>1.மன்றம் அனுமதிக்கலாம்.<br>மேற்படி பணிக்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்ளலாம். |
| பொருள்.20 | இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 24ல் முல்லை நகர் முதல் தெருவில் வடிகால் வசதி செய்து தருமாறு அப்பகுதி மக்கன் கேட்டுக் கொண்டதன் பேரில் மேற்படி முல்லை நகர் முதல் தெருவில் வடிகால் கட்டும் பணிக்கு ரூ. 4.15 லட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு–<br>1.மன்றம் அனுமதிக்கலாம். மேலும் மேற்படி பணிக்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியில் இருந்து செலவு செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம். |

| | |
|---|---|
| பொருள்.21 | இந்நகராட்சி பராமரிப்பில் உள்ள மஞ்சள் பட்டிணம் மயான வளாகத்தில் நவீன எரிவாயு கூடத்தில் அருகில் உள்ள காலியிடத்தில் ஈமக்கிரியை சடங்குகள் செய்யும் பொருட்டு மேற்கூரை அமைத்து தருமாறு சட்டமன்ற உறுப்பினர் 8.19 அன்று நேராய்வு செய்த பொழுது தெரிவித்ததின் பேரில் பொதுமக்கள் நலன் கருதி மேற்படி மயானத்தில் ஷெட் அமைக்க தயாரிக்கப்பட்டுள்ள உத்தேச மதீப்பீடு ரூ. 3.50 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு–<br>1.மன்றம் அனுமதிக்கலாம். மேலும் மேற்படி பணிக்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியில் இருந்து செலவு செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம். |
| பொருள்.22 | இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 12,13,14,10 மற்றும் 11–ல் உள்ள வடிகால் மற்றும் சிறுபாலங்கள் பழுதடைந்து உள்ளது. இதனால் கழிவு நீர் தேங்கி நின்று சுகாதார கேடு விளைவிக்க வாய்ப்புள்ளது. எனவே சுகாதார நலன் கருதி மேற்படி வார்டுகளில் கழிவு நீர் வடிகால் புதுப்பிக்கவும் மற்றும் சிறுபாலங்கள் மராமத்துப்பணி மேற்கொள்ளவும் உத்தேச மதிப்பீடு ரூ. 1.30 லட்சத்திற்கு தயாரிக்கப்பட்டுள்ளது மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு–<br>1.மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்கண்ட செலவினத்தை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ளலாம். |
| பொருள்.23 | உள்ளாட்சி அமைப்புகளில் உள்ள சொத்துவரி கேட்பிற்கு ஏற்றவாறு அனைத்து வீடுகளிலும் குடிநீர் குழாய் இணைப்புகள் வழங்க அரசு ஆணை எண். 44, நகராட்சி நிர்வாக மற்றும் குடிநீர் வழங்க துறை நாள். 24.02.2016ல் உத்தரவு வழங்கப்பட்டதைத் தொடர்ந்து பரமக்குடி நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் 7500 எண்ணம் குடிநீர் குழாய் இணைப்புகள் தவனை முறையில் வழங்க நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை செயல்முறை உத்தரவு ந.க.எண். 13277/2018/சிம2 நாள். 03.12.2018ல் ரூ.270.00 லட்சத்திற்கு நிர்வாக ஒதுக்கீடு வழங்கப்பட்டு 23.01.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டதைத் தொடர்ந்து 03.02.2019 அன்று இப்பணிக்கான வேலை உத்தரவு வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றது. மேற்படி தவணை முறையில் குடிநீர் குழாய் இணைப்புகள் பெறுவதற்கான விதிமுறைகள் பொதுமக்களுக்கு தெரியப்படுத்தும் வடிகால் நகரின் முக்கியமாக 5 சந்திப்புகளில் ஃப்ளக்ஸ் போர்டுகல் வைப்பதற்கு ஆணையர் அவர்களின் நேரடி அறிவுரையில் தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து இப்பணிக்கு ஏற்படும் உத்தேச செலவினத்தொகை ரூ. 90,000/– க்கு மன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு–<br>1.மன்றம் அனுமதிக்கலாம். |
| பொருள்.24 | இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட 3–வது வார்டு பகுதியில் ஏற்கனவே உள்ள சிறு மின் விசை பம்பு நீரோட்டம் வெகுவாக குறைந்து விட்டதால் இயக்க முடியாத நிலையில் உள்ளது. எனவே மேற்படி பகுதி பொது மக்களின் கோரிக்கையின் படி 3–வது வார்டு பகுதியில் வேறு இடத்தில் ஆழ்துளை கிணறு அமைக்க உத்தேசிக்கப்பட்டு, 4.30லட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு இந்நகர் மன்ற தீர்மான எண். 793 நாள். 31.01.2019ன் படி நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது. மேற்படி பணிக்கு 28.02.2018 அன்று ஒப்பந்தபுள்ளிகள் கோரியதில், இரண்டு ஒப்பந்தபுள்ளிகள் பெறப்பட்டது. பெறப்படும் இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் மதிப்பீட்டு தொகையை விட 0.05/– குறைவாக கொடுத்துள்ள திரு. எம். சங்கர் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தபுள்ளி ஏற்கப்பட்டு இந்நகர் மன்ற தீர்மான எண்.844, நாள்.28.02.2019ன் படி,ஏற்கப்பட்டு வேலை உத்தரவு வழங்கப்பட்டது.<br>மேற்படி ஆழ்துளை கிணறு அமைக்கும் பணிக்கு நீரோட்டம் உள்ள இடத்தை தேர்வு செய்ய ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. 3வது வார்டு பகுதியில் நீரோட்டம் தேவையான அளவு இல்லாததாலும், |

| | |
|---|---|
| | பொது மக்களின் கோரிக்கையின்படியும் வேறு இடம் தேர்வு செய்யப்பட்டது. இதன்படி ஆழ்துளை கிணற்றை 2வது வார்டு மற்றும் 3வது வார்டு சந்திப்பு பகுதியில் எஸ்.எஸ்.கோவில் தெரு, பகுதியில் நீரோட்டம் தேவையான அளவு இருந்ததில் மாற்று இடமாக இவ்விடம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. மேற்படி மாற்று இடத்தில் ஆழ்துளை கிணறு அமைக்கவும், இப்பணியை அதே ஒப்பந்தபுள்ளி விலை விகிதத்தில் ஒப்பந்ததாரர் திரு. எம். சங்கர் என்பவர் மூலம் மேற்கொள்ள அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு–<br>மன்றம் அனுமதிக்கலாம். |
| பொருள்.25 | நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் எண். 10945/P3/2015–1, நாள். 12.07.2015ல் 4வது மாநில நிதிக்குழுவின் பரிந்துரையின்படி பரமக்குடி நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை பணிகளை சிறப்பாக செயல்படுத்திட கலவை உரக்கிடங்கில் அடிப்படை கட்டுமான பணிகள் செய்வதற்கும், 10 வாகனங்கள் புதிதாக வாங்குவதற்கும் ரூ. 519.80 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு புதிதாக வாகனங்கள் வாங்கப்பட்டு, மேற்கண்ட வாகனங்களை இயக்குவதற்கு தேவையான 10 ஓட்டுனர்களை நகர்மன்ற தீர்மான எண்.540, நாள். 25.07.2018ன் படி குறைந்த பட்ச விலைகுறிப்பிட்ட **Exsernet, Madurai** என்ற நிறுவனத்திற்கு பணி உத்தரவும், அதனை தொடர்ந்து பணி நீட்டிப்பு உத்தரவும் வழங்கப்பட்டு 01.08.2018 முதல் இன்று வரை ஓட்டுனர் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.<br>மேற்கண்ட நிறுவனத்திற்கு பணி உத்தரவுகள் வழங்கப்பட்டு 1.1/4 வருடங்கள் ஆகிவிட்டபடியால் புதிதாக ஒப்பந்தபுள்ளி கோரி ஓட்டுனர் பணிகள் மேற்கொள்ள மாவட்ட ஆட்சியர் அவர்களின் புதிய ஊதிய விகிதத்தின் படி கீழ்கண்டவாறு கணக்கீடு செய்யப்பட்டுள்ளது.<br><br>10 ஓட்டுனர்கள் x ரூ.530 x 365 நாட்கள் = ரூ. 1934500<br>EPF(13%) = ரூ. 251485<br>ESI (3.25%) = ரூ. 62871<br>யூனிபார்ம், நிர்வாக செலவினம் மற்றும் இதர செலவினங்கள் = ரூ. 193450<br>**மொத்தம் ரூ. 2442306**<br><br>மேற்கண்டவாறு ரூ. 24.50லட்சம் உத்தேச செலவினத்தில் திடக்கழிவு மேலாண்மை பணிகளில் ஓட்டுனர் பணிகள் முன் அனுபவம் உள்ள தகுதிவாய்ந்த தனியார் நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்தபுள்ளி கோரி ஓட்டுனர் பணிகள் மேற்கொள்ள நகர் மன்றத்தின் அனுமதிக்கு<br>அலுவலகக் குறிப்பு–<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. ரூ. 24.50லட்சம் உத்தேச செலவினத்தில் திடக்கழிவு மேலாண்மை பணிகளில் ஓட்டுனர் பணிகள் முன் அனுபவம் உள்ள தகுதிவாய்ந்த தனியார் நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்தபுள்ளி கோரி ஓட்டுனர் பணிகள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>3. செலவினத்தை **SWM** பயனாளர் கட்டணம் மற்றும் பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம். |
| பொருள்.26 | பரமக்குடி நகராட்சி பகுதியில் வைக்கப்படும் விளம்பரங்களை விளம்பர பலகைகள் முறைப்படுத்துதல் நிறுவ அனுமதி வழங்குதல் குறித்த அரசாணை ( 4D) எண்.2, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (MC–1) நாள்.05.06.2018 உள்ளதை சட்ட திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு அரசாணை எண். 15,17 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (MC–1) நாள். 30.01.2019 & 31.01.2019ன் படி உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. மேற்படி அரசாணைகள் அரசிதழ் 31.01.2019 ( Part III |

| | |
|---|---|
| | Section I(a) நாள். 31.01.2019ன் படி வெளியிடப்பட்டுள்ளது. மேற்படி அரசாணைகள் மன்றத்தின் பார்வைக்கும் பதிலுக்கும்.<br>அலுவலகக் குறிப்பு—<br>மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.<br>ந.க.எண். 1228/2019/எப்2 |
| பொருள். 27 | பரமக்குடி நகராட்சி பொதுப்பிரிவு பணியாளர் பொதுசுகாதார பணியாளர்கள், மற்றும் பொறியியல் பணியாளர்கள் அலுவலக நிமித்தமாக அவசர அவசியம் கருதி வெளியூர் சென்று வருவதற்கு 2019—2020 ம் ஆண்டுக்கு ஆகும் பயணப்படி செலவினத்தை பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு—<br>மன்றம் அனுமதிக்கலாம். |
| பொருள்.28 | இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள பகிர்மான குழாய்கள் மற்றும் மெயின் குழாய்களில் அவ்வப்போது ஏற்படும் குழாய் உடைப்புகளை சரிசெய்ய இந்நகர் மன்ற தீர்மான எண். நாள். 05.2019ன் படி அனுமதி அளித்ததன் பேரில் 26.06.2019ம் தேதி ஒப்பந்தபுள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்ட விபரப்படி இரண்டு ஒப்பந்ததாரர்களிடம் இருந்து ஒப்பந்தப்புள்ளிகள் வரப் பெற்றுள்ளது மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும்.<br><br>1. திரு. எம். சங்கர் ஒப்பந்ததாரர் 0.87/— மதிப்பீட்டைவிட கூடுதல்<br>2. திரு. பி. கோவிந்தன் ஒப்பந்ததாரர் 0.05/— மதிப்பீட்டைவிட குறைவு<br><br>அலுவலகக் குறிப்பு—<br>வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்த புள்ளிகளில் திரு. பி. கோவிந்தன், ஒப்பந்ததாரர் மதிப்பீட்டை விட 0.05% குறைவாக கொடுத்துள்ளதால் மன்றம் ஏற்று அனுமதிக்கலாம். |
| பொருள். 29 | இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பொதுமக்களின் இதர பிற தேவைகளுக்காக அமைக்கப்பட்டுள்ள சிறுமின் விசை பம்புகளுடன் கூடிய சின்டெக்ஸ் தொட்டிகளில் பொதுமக்களால் அன்றாட அதிக அளவு பயன்பாட்டின் காரணமாக ஏற்படக்கூடிய பழுதுகளை சரி செய்ய வேண்டிய சூழ்நிலை உள்ளதால், வார்டு எண்.1 முதல் 18 வரை உள்ள சிறுமின்விசைப் பம்புகளில் ஏற்படக் கூடிய பகுதிகளை சரி செய்யம் பணிக்கு தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.5,00,000/—க்கு மன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு—<br>மன்றம் அனுமதிக்கலாம். மேலும் இப்பணிக்கான செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியில் இருந்து செலவு செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம். |
| பொருள். 30 | இந்நகராட்சிக்குட்பட்ட 36 வார்டுகளிலும் சேதாரமாகும் உலர் கழிவுகளை எரிபொருளாக பவர் பிளாண்ட் மற்றும் சிமிண்ட் ஆலைகளுக்கு அனுப்புவதற்கு, பிளாஸ்டிக் கழிவுகளையும், மற்ற ஏனைய உலர் கழிவுகளை அதிக அழுத்தம் கொடுத்து சுருக்கி வைப்பதற்கான இயந்திரம் (Baling Machine) வாங்கவும் அதற்கான உத்தேச மதிப்பீடு ரூ. 4.80/— லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |

| | |
|---|---|
| | அலுவலகக் குறிப்பு–<br>மன்றம் அனுமதிக்கலாம். மேலும் இப்பணிக்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியில் இருந்து செலவு செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம். |
| பொருள்.31 | இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 24 அரசு மருத்துவமனையில் பார்வையாளர்கள் தங்குவதற்கு தங்கும் விடுதி கட்டி முடிக்கப்பட்டுள்ளது. மேற்படி பார்வையாளர்கள் தங்கும் விடுதியில் பார்வையாளர்களுக்கு தேவையான அடிப்படை வசதிகள் இல்லாமல் உள்ளதால் பார்வையாளர்களுக்கு தேவையான கட்டில், மெத்தை, பெட்சீட் மற்றும் தலையனை போன்ற பொருட்கள் வாங்கி வைக்கப்பட வேண்டி உள்ளது. எனவே மேற்கண்ட பொருட்கள் வாங்க தயாரிக்கப்பட்டுள்ள உத்தேச மதிப்பீடு ரூ. 2.00 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு–<br>மன்றம் அனுமதிக்கலாம். மேலும் இப்பணிக்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியில் இருந்து செலவு செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம். |
| பொருள். 32 | இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பொதுமக்களின் இதரபிற தேவைகளுக்காக அமைக்கப்பட்டுள்ள சிறுமின் விசைப்பம்புகளுடன் கூடிய சின்டெக்ஸ் தொட்டிகள் பொதுமக்களின் அதிக அளவு பயன்பாட்டின் காரணமாக ஏற்படக் கூடிய பழுதுகளை சரி செய்ய வேண்டிய உள்ளதால் வார்டு எண்.19 முதல் 36 வார்டு வரை உள்ள சிறுமின் விசைப்பம்புகளை சரி செய்யும் பணிக்கு தயார் செய்யப்பட்டுள்ள உத்தேச மதிப்பீடு ரூ. 5.00லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு–<br>மன்றம் அனுமதிக்கலாம். மேலும் இப்பணிக்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியில் இருந்து செலவு செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம். |
| பொருள். 33 | இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.26 பாரதி நகர் பகுதிகளில் ஏற்கனவே அமைக்கப்பட்டு இருந்த பகிர்மானக் குழாய்கள் அடைப்புகள் ஏற்பட்டும் மற்றும் உடைந்தும் விட்டபடியால் அப்பகுதி பொதுமக்களுக்கு சீரான குடிநீர் வழங்குவதில் சிரமங்கள் ஏற்பட்டுள்ளது. எனவே அப்பகுதி பொதுமக்கள் புதிதாக பைப்லைன் அமைத்து கொடுக்க கோரியதன் அடிப்படையில் குடிநீர் பணியில் அவசியத்தைக் கருத்தில் கொண்டு மேற்படி பகுதியில் புதிதாக பைப்லைன் அமைக்க தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ. 1,20,000/– க்கு மன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக் குறிப்பு–<br>மன்றம் அனுமதிக்கலாம். |
| பொருள்.34 | இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.8, பெருந்தேவி நகர், கிறிஸ்தவ காலனி, வி.பி.காலனி, ஜீவாநகர், பர்மா காலனி, மற்றும் மலையான் குடியிருப்பு ஆகிய பகுதி பொதுமக்களின் குடிநீர் பற்றாக்குறைவு சரி செய்யும் பொருட்டு அப்பகுதிகளில் புதிதாக பகிர்மானக் குழாய்கள் அமைக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ. 7,40,000/– க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |

| | |
|---|---|
| | அலுவலகக் குறிப்பு–<br>மன்றம் அனுமதிக்கலாம். |
| பொருள்.35 | இந்நகராட்சியில் 2018–19ம் ஆண்டு ஆண்டுக்கணக்கு உள்ளாட்சி நிதித்தணிக்கைக்கு கணக்கு முடிக்கப்பட்ட மூன்று நிதிக்கணக்குகளையும் மற்றும் தணிக்கை அறிக்கைகளையும் ஸ்கேன் செய்து 5 பிரதிகளில் ஜெராக்ஸ் எடுக்கப்பட்டு, பைண்டிங் செய்தது வகைக்கு செலவினத் தொகைரூ.12,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு–<br>மன்றம் அனுமதிக்கலாம். |
| பொருள்.36 | தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டிட விதிகள் 2019ன்படி நகராட்சி பகுதியில் கட்டப்படும் கட்டிடங்களுக்கு பொறியாளராக பதிவு செய்ய திரு.கே.ஹரிஹரன் என்பவர் விண்ணப்பம் செய்துள்ளார்கள்.<br>மேற்காணும் கே.ஹரிஹரன் என்பவர் பரமக்குடி நகராட்சி பகுதியில் பதிவு பெற்ற பொறியாளர் சான்று வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>அலுவலகக் குறிப்பு–<br>மனுதாரர் உரிய கட்டணம் ரூ.5000/– கணினி வாயிலாக செலுத்தி உள்ள்தால், மேற்காணும் கட்டிட விதிகளின்படி ஐந்து வருட காலத்திற்கு 31.03.2024 வரை பதிவு செய்து வழங்கலாம். ஒவ்வொரு ஆண்டு புதுப்பித்தல் கட்டணம் செலுத்தி உரிமத்தினை புதுப்பித்தல் வழங்கலாம்.<br>(ந.க.எண்.851/2019/எப்2) |
| பொருள்.37 | இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் காட்டுப்பரமக்குடி தலைமை நீரேற்ற நிலையத்தில் உள்ள சுற்றுத்தலம் (Compound Wall) உயரம் குறைவாக இருப்பதால் பகல் மற்றும் இரவு நேரங்களில் அந்நியர்கள் ஏறி குதித்து உள்ளே சென்று அசுத்தம் ஏற்படுத்துகின்றனர். மேலும் காம்பவுண்ட் சுவற்றில் அதிக அளவில் நோட்டீஸ் ஒட்டி அசிங்கப்படுத்துகின்றனர். எனவே தலைமை நீரேற்ற நிலையத்தை பாதுகாக்கும் பொருட்டு மேற்படி சுற்றுச்சுவரினை உயர்த்தியும் சுவற்றின் உள்பகுதியில் மழைநீர் சேகரிப்பு மற்றும் தூய்மை இந்தியா தொடர்பான விளக்கப்படங்களை வரையவும் மதிப்பீடுகள் தயார் செய்ய ஆணையாளர் மற்றும் பொறியாளர் நேரடி ஆய்வின் போது தெரிவித்தல் பேரில் தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பாகத் தொகை ரூ 2,20,000/–க்கு மன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு–<br>மன்றம் அனுமதிக்கலாம். |

தனி அலுவலர்
பரமக்குடி நகராட்சி.

பரமக்குடி நகராட்சி அலுவலகம்,
நாள்.**14.08.2019**

**நிகழும் திருவள்ளுவராண்டு ஆகஸ்ட் மாதம் 14 ம் நாள் (14.08.2019) காலை 11.00 மணியளவில் நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற சிறப்புக் கூட்டப் பொருள்**

<table>
<tr><td>பொருள்.1</td><td>
பரமக்குடி நகராட்சிக்கு தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் 2019–20ம் ஆண்டின் கீழ் மழையின் காரணமாகவும் குடிநீர் இணைப்புகள் மற்றும் குடிநீர் வினியோக குழாய்கள் மராமத்து பணிகள் மேற்கொண்டதில் ஏற்பட்ட பள்ளங்களை சீரமைக்கும் பணிக்கு கீழ்க்கண்டவாறு பணிகள் தேர்வு செய்யப்பட்டுள்ளதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
<table>
<tr><th rowspan="2">வ. எண்</th><th rowspan="2">பணியின் பெயர்</th><th colspan="2">நீளம் (கி.மீ)</th><th rowspan="2">மதிப்பீடு (ரூ. லட்சத்தில்)</th></tr>
<tr><th>தார் சாலை</th><th>பேவர் கல் தளம்</th></tr>
<tr><td></td><td>சிப்பம்.1</td><td></td><td></td><td></td></tr>
<tr><td>1</td><td>மஞ்சள் பட்டிணம் மெயின் ரோடு (நகராட்சிப் பள்ளி சந்திப்பு முதல் தேனா புதுக்கோட்டை சாலை சந்திப்பு வரை), ஜீவா நகர் முதல் குறுக்குத் தெரு, புது நகர் 2,3,4,5 வது குறுக்குத் தெருக்கள், வைகைநகர்–11 மற்றும் 12வது குறுக்குத் தெரு, கோகுலர் தெரு, பாலன் நகர் முதல் தெரு, சிங்கார தோப்பு தெரு–கிழக்கு பகுதி ,கீழ வீதி மற்றும் சந்தைப் பேட்டைத் தெருக்களில் வடிகால் அமைத்து பேவர் இயந்திரம் மூலம் தார்தளம் அமைத்தல் (வார்டு எண்.1,8,21,27,33,7)</td><td>2.911</td><td></td><td>200.00</td></tr>
<tr><td></td><td>சிப்பம்.2</td><td></td><td></td><td></td></tr>
<tr><td>2</td><td>பொன்னையாபுரம் எம்.ஜி.ஆர் நகர், பாலன் நகர், தர்மராஜபுரம் ,தேவராஜ் நகர் , மாமங்க தெப்பக்குளம் குறுக்குத் தெரு மற்றும் பாரதியார் தெரு, ஆகிய தெருக்களில் (வார்டு எண். 27,28,1,6,5) வடிகால் அமைத்து பேவர் கல்தளம் அமைத்தல்</td><td></td><td>2.746</td><td>200.00</td></tr>
</table>
</td></tr>
</table>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 3 | **சிப்பம்.3** | | | | |
| | கோகுலர் தெரு–குறுக்குத் தெரு, சத்தியமூர்த்தி தெரு, முசாபர்கனி தெரு, அண்ணா நகர் குறுக்குத் தெரு, மாதவன் தெரு, ஜீவா நகர் கிழக்கு முதல் குறுக்குத் தெரு, கக்கன் நகர், முனியாண்டிபுரம், கன்னி சுந்தர்ராஜன் தெரு, மட்டமன்னா பாகவதர் தெரு, காட்டுப்பரமக்குடி ஆதி திராவிடர் காலணி மேற்கு குறுக்குத் தெரு, எஸ்.எஸ். காலணி, மலையான்குடியிருப்பு (பெருந்தேவி நகர்), கிறிஸ்துவகாலனி, காந்திநகர் கடைசிதெரு , கௌரியம்மன் கோவில் குறுக்குத் தெரு, ஈஸ்வரன் கோவில் 4வது தெரு, காமராஜர் தெரு கிழக்கு ,ஜீவாநகர் மேற்கு –குறுக்குத்தெரு , காட்டுப்பரமக்குடி மேலத்தெரு– குறுக்குத் தெருவில் வடிகால் அமைத்து பேவர் கல்தளம் அமைத்தல் (வார்டு எண். 2,8,9,4,14 , 25,24,36,29,30 மற்றும் 31 ) | | 3.011 | 200.00 | |

அலுவலகக் குறிப்பு–

1) மன்றம் அனுமதிக்கலாம்
2) மேற்படி தேர்வு செய்யப்பட்ட (3 சிப்பம்) பணிகளுக்கு உரிய பிரேரணை தயார் செய்து நகராட்சி நிர்வாக ஆணையரகத்திற்கு சமர்பிக்கவும், மன்றம் அனுமதிக்கலாம்.

தனி அலுவலர்
பரமக்குடி நகராட்சி.